# ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த
# முமுக்ஷுப்படி

## திருமந்த்ர ப்ரகரணம்

1. முமுக்ஷுவுக்கு அறிய வேண்டிய ரஹஸ்யம் மூன்று.
2. அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்.
3. திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்க வேணும்.
4. மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது.
5. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து இழந்தோம் என்கிற இழவும் இன்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேஸ்வரன், தன் க்ருபையாலே, இவர்கள் தன்னை அறிந்து கரைமரம் சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.
6. சிஷ்யனாய் நின்றது - சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக.
7. ஸகல ஸாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஜ்ஞானம் ஸ்வயமார்ஜிதம் போலே; திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞானம் பைத்ருக தனம் போலே.
8. பகவன் மந்த்ரங்கள் தான் அநேகங்கள்.
9. அவை தான் வ்யாபகங்கள் என்றும் அவ்யாபகங்கள் என்றும் இரண்டு வர்க்கம்.
10. அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ஸ்ரேஷ்டங்கள்.
11. இவை மூன்றிலும் வைத்துக் கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதானம்.
12. மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு.
13. இத்தை வேதங்களும் ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் விரும்பினார்கள்.
14. வாச்யப் ப்ரபாவம் போலன்று வாசகப் ப்ரபாவம்.
15. அவன் தூரஸ்தனன் ஆனாலும் இது கிட்டி நின்று உதவும்.
16. த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே.
17. சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது.
18. இது தான் "குலம் தரும்" என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.
19. ஐஸ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.
20. கர்ம ஜ்ஞான பக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும்.
21. ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞானத்தை பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாய் இருக்கும்.
22. "மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே அறிய வேண்டும் அர்த்தம் எல்லாம் இதுக்குள்ளே உண்டு.
23. அதாவது அஞ்சர்த்தம்.

24. பூர்வாசார்யர்கள் இதில் அர்த்தம் அறிவதற்கு முன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்த ஜ்ஞானம் பிறந்த பின்பு "பிறந்த பின் மறந்திலேன்" என்கிறபடியே இத்தை ஒழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணி அறியார்கள்.
25. வாசகத்திற் காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கு அடி ஈச்வரனே உபாய உபேயம் என்று நினைத்திருக்கை.
26. இது தன்னில் சொல்லுகிற அர்த்தம் - ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும் உபாயமும் பலமும் என்னவுமாம்.
27. பலமிருக்கும்படி ப்ரமேயசேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன்னோம்.
28. இது தான் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாய் இருக்கும்.
29. மூன்று பதமும் மூன்று அர்தத்தைச் சொல்லுகிறது.
30. அதாவது சேஷத்வமும், பாரதந்த்ரியமும், கைங்கர்யமும்.
31. இதில் முதற் பதம் ப்ரணவம்.
32. இது அ என்றும் உ என்றும் ம என்றும் மூன்று திருவக்ஷரம்.
33. மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணை திரட்டினாற் போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது.
34. ஆகையால் இது சகல வேத ஸாரம்.
35. இதில் அகாரம் சகல சப்தத்துக்கும் காரணமாய் நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாய் இருக்கையாலே, சகல ஜகத்துக்கும் காரணமாய் சர்வ ரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது.
36. ரக்ஷிக்கையாவது விரோதியைப் போக்குகையும் அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும்.
37. இவை இரண்டும் சேதனர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாய் இருக்கும்.
38. ஸம்ஸாரிகளுக்கு விரோதி சத்ருபீடாதிபதிகள், அபேக்ஷிதம் அன்னபானாதிகள்; முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்ஸார ஸம்பந்தம், அபேக்ஷிதம் பரமபத ப்ராப்தி; முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி கைங்கர்ய ஹாநி, அபேக்ஷிதம் கைங்கர்ய வ்ருத்தி.
39. 'ஈச்வரனை ஒழிந்தவர்கள் ரக்ஷகர் அல்லர்' என்னுமிடம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்.
40. ரக்ஷிக்கும் போது பிராட்டி சன்னிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீ ஸம்பந்தம்[1] அநுஸந்தேயம்.
41. அத்ர பகவத்சேநாபதிமிச்ரர் வாக்யம்: "அவன் மார்பை விட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது".
42. பர்த்தாவினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவைப் போலே ப்ரதம சரம பதங்களை விடாதே இருக்கும் இருப்பு.
43. ஸ்ரீ நந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப் போலே.
44. ஒருவன் அடிமை கொள்ளும் போது க்ருஹிணிக்கு என்றன்றே ஆவணை[2] ஓலை எழுதுவது; ஆகிலும், பணி செய்வது க்ருஹிணிக்கிறே; அது போலே நாம் பிராட்டிக்கு அடிமையாய் இருக்கும்படி.
45. ஆகப் பிரித்து நிலை இல்லை.
46. ப்ரபையையும் ப்ரபாவானையும், புஷ்பத்தையும் மணத்தையும் போலே.
47. ஆக இச்சேர்த்தி உத்தேச்யமாய் விட்டது.
48. இதிலே சதுர்த்தி ஏறிக் கழியும்.

---

[1] ஸம்பந்தமும்

[2] ஆவண

49. சதுர்த்தி ஏறினபடி என் என்னில்.
50. நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாய் இருக்கையாலே.
51. இத்தால் ஈச்வரனுக்கு சேஷம் என்கிறது.
52. சேஷத்வம் துக்க ரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறது என்னில்:
53. அந்த நியமம் இல்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாய் இருக்கும் இருப்பு சுகமாகக் காண்கையாலே.
54. அகாரத்திலே கல்யாண குணங்களைச் சொல்லுகையாலே இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.
55. சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்.
56. சேஷத்வம் இல்லாத போது ஸ்வரூபம் இல்லை.
57. ஆத்மாபஹாரம் ஆவது ஸ்வதந்த்ரம் என்கிற நினைவு: ஸ்வதந்த்ரமாம் போது இல்லையாய் விடும்.
58. ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்.
59. இத்தால் பிறர்க்கு சேஷமன்று என்கிறது.
60. பெரிய பிராட்டியார்க்கு சேஷம் என்கிறது என்றும் சொல்லுவர்கள்.
61. அதிலும் அந்ய சேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.
62. தேவர்களுக்கு சேஷமான புரோடாஸத்தை நாய்க்கிடுமா போலே, ஈச்வர சேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை.
63. பகவத் சேஷத்வத்திலும் அந்ய சேஷத்வம் கழிகையே ப்ரதாநம்.
64. "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்கையாலே.
65. இத்தால் தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்கிறது.
66. மகாரம் இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞான வாசியுமாய் இருக்கையாலே ஆத்மாவைச் சொல்லுகிறது.
67. இது தான் ஸமஷ்டி வாசகம்.
68. ஜாத்யேக வசனம்.
69. இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று.
70. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்தில்[3] சொன்னோம்.
71. மணத்தையும் ஒளியையும் கொண்டு பூவையும் ரத்னத்தையும் விரும்புமா போலே சேஷமென்று ஆத்மாவை ஆதரிக்கிறது; அல்லாத போது "உயிரினாற் குறைவிலம்" என்கிறபடியே த்யாஜ்யம்; அது தோன்ற சேஷத்வத்தைச் சொல்லிப் பின்னை ஆத்மாவை சொல்லுகிறது.
72. ஆக ப்ரணவத்தால் "கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ" என்கிறபடியே ஜீவ பர ஸம்பந்தம் சொல்லிற்று.
73. இத்தால் "தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" என்றதாயிற்று.
74. அகாரத்தாலும் மகாரத்தாலும் ரக்ஷகனையும் ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று; சதுர்த்தியாலும் உகாரத்தாலும், ரக்ஷண ஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று.
75. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது.
76. உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு; அகாரத்தை விவரிக்கிறது நாராயண பதம்; மகாரத்தை விவரிக்கிறது சதுர்த்தி; நாரபதம் என்றும் சொல்லுவர்கள்.
77. அடைவே விவரியாதொழிகிறது விரோதி போய் அநுபவிக்க வேண்டுகையாலே.

[3] தத்வசேகரத்திலே

78. நமஸ்ஸு ந என்றும், ம: என்றும் இரண்டு பதம்.
79. ம: என்கிற வித்தால், தனக்கு உரியன் என்கிறது; ந என்று அத்தைத் தவிர்க்கிறது.
80. ஆக நம: என்கிற வித்தால் தனக்கு உரியன் அன்று என்கிறது.
81. பிறர்க்கு உரியன் ஆனவன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கு என்னுமன்று யோக்யதையும் கூட அழியும்.
82. இத்தால் விரோதியைக் கழிக்கிறது.
83. விரோதி தான் மூன்று.
84. அதாவது - ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும்.
85. ஸ்வரூப விரோதி கழிகையாவது "யானே நீ என் உடைமையும் நீயே" என்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது "மற்றை நம் காமங்கள் மாற்று" என்றிருக்கை.
86. ம: என்கை ஸ்வரூப நாசம்; நம: என்கை ஸ்வரூப உஜ்ஜீவனம்.
87. இது தான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.
88. "தொலைவில்லி மங்கலம் தொழும்" என்கையாலே ஸ்வரூபம் சொல்லிற்று; "வேங்கடத்துறைவார்க்கு நம" என்கையாலே உபாயம் சொல்லிற்று; "அந்தி தொழும் சொல்" என்கையாலே பலம் சொல்லிற்று.
89. "உற்றதும் உன் அடியார்க்கு அடிமை" என்கிறபடியே, இதிலே பாகவத சேஷத்வமும் அநுஸந்தேயம்.
90. இது - அகாரத்திலே என்றும் சொல்லுவர்கள்; உகாரத்திலே என்றும் சொல்லுவர்கள்.
91. ஈச்வரன் தனக்கேயாய் இருக்கும்; அசித்து பிறர்க்கேயாய் இருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாய் இருக்கும் என்று முற்பட்ட நினைவு; அங்ஙனின்றிக்கே, அசித்தைப் போலே "தனக்கேயாக எனைக் கொள்ள வேணும்" என்கிறது நமஸ்ஸால்.
92. அதாவது போக தசையில் ஈச்வரன் அழிக்கும் போது நோக்க வேணும் என்று அழியாதொழிகை.
93. அழிக்கைக்கு ஹேது கீழே சொல்லிற்று; மேலும் சொல்லும்.
94. இந்த நினைவு பிறந்த போதே க்ருதக்ருத்யன்; இந்நினைவு இல்லாத போது எல்லா துஷ்க்ருதங்களும் க்ருதம்; இந்நினைவிலே எல்லா சுக்ருதங்களும் உண்டு; இது இன்றிக்கே இருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும் ப்ராயச்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜனங்கள்; இது தன்னாலே எல்லாப் பாபங்களும் போம்; எல்லாப் பலன்களும் உண்டாம்.
95. நாராயணன் என்றது - நாரங்களுக்கு அயநம் என்றபடி.
96. நாரங்களாவன - நித்யவஸ்துக்களினுடைய திரள்.
97. அவையாவன - ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞான-ஸக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌஸீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்ய பூஷணங்களும், திவ்ய ஆயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரஸாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணாதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்கு உட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்.
98. அயநம் என்றது - இவற்றுக்கு ஆஸ்ரயம் என்றபடி.
99. அங்ஙனின்றிக்கே, இவை தன்னை ஆஸ்ரயமாக உடையன் என்னவுமாம்.

100. இவை இரண்டாலும் பலித்தது பரத்வ சௌலப்யங்கள்.
101. அந்தர்யாமித்வமும் உபாயத்வமும் உபேயத்வமும் ஆகவுமாம்.
102. "எம்பிரான் எந்தை" என்கையாலே, ஈச்வரனே எல்லா உறவு முறையும் என்று சொல்லும்.
103. நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காய் இருக்கும்.
104. இரா மடம் ஊட்டுவாரைப் போலே உள்ளே பதி கிடந்து சத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போரும்.
105. "ஆய" என்கிற வித்தால், "சென்றால் குடையாம்" என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்ய வேணும் என்று அபேக்ஷிக்கிறது.
106. நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லை என்று வைத்துக் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோ என்னில்.
107. "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்கிறபடியே கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறியன்று; ஸ்வரூப ப்ரயுக்தம்.
108. ஆகையால் "வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.
109. "கண்ணாரக் கண்டு கழிவதோர் காதல் உற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் "ஸதா பஷ்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.
110. "பழுதே பலபகலும் போயின என்று" இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை.
111. "அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்" என்னா நின்றார்களிறே.
112. இவ்வடிமை தான் "ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி" என்கிறபடியே ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும்.
113. எட்டிழையாய் மூன்று சரடாய் இருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே திருமந்த்ரம்.
114. இத்தால் ஈச்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்று ரக்ஷிக்கும் என்கிறது.
115. ஆகத் திருமந்த்ரத்தால், எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியனன்றிக்கே ஒழிய வேணும்; சர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும் என்றதாயிற்று.

**திருமந்த்ர ப்ரகரணம் முற்றிற்று**

---

## ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த
## முமுக்ஷுப்படி

## த்வய ப்ரகரணம்

116. புறம்புண்டான பற்றுக்களை அடைய வாசனையோடே வீடுகையும், எம்பெருமானையே தஞ்சம் என்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்குத் த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே போதுபோக்காகையும், இப்படி இருக்கும்

ஶ்ரீவைஷ்ணவர்காள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதக்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞானமும் விரக்தியும் சாந்தியும் உடையனாய் இருக்கும் பரம ஸாத்விகனோடே ஸஹவாசம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவஸ்யாபேக்ஷிதம்.

117. இந்த அதிகாரிக்கு ரஹஸ்ய த்ரயமும் அனுஸந்தேயம்.

118. எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறு என்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறு என்கிறது; சரம ச்லோகத்தில் ஈச்வரனாலே பேறு என்கிறது; த்வயத்திலே பெரிய பிராட்டியாராலே பேறு என்கிறது.

119. பெரிய பிராட்டியாராலே பேறு ஆகையாவது இவள் புருஷகாரம் ஆனால் அல்லது ஈச்வரன் கார்யம் செய்யான் என்கை.

120. த்வயத்துக்கு அதிகாரி ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமும் உடையவன்.

121. இவை இரண்டும் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

122. இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈச்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் அச்சேர்த்தியில் அடிமை இரக்கிறது.

123. ஶ்ரீ என்று பெரிய பிராட்டியார்க்குத் திருநாமம்.

124. ஶ்ரீயதே - ஷ்ரயதே.

125. இதுக்கர்த்தம் எல்லார்க்கும் இவளைப் பற்றி ஸ்வரூப லாபமாய், இவள் தனக்கும் அவனைப் பற்றி ஸ்வரூப லாபமாய் இருக்கும் என்று.

126. இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக.

127. நீரிலே நெருப்பு கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக.

128. இவள் தாயாய் இவர்கள் க்லேசம் பொறுக்க மாட்டாதே அவனுக்குப் பத்னியாய் இனிய விஷயமாய் இருக்கையாலே கண்ணழிவற்ற புருஷகாரம்.

129. திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல் வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே.

130. மதுப்பாலே இருவர் சேர்த்தியும் நித்யம் என்கிறது.

131. இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை.

132. ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் சேதனனுடைய அபராதத்தையும் கண்டு அகல மாட்டாள்.

133. சேதனனுக்கு இவை இரண்டையும் நினைத்து அஞ்ச வேண்டா.

134. இத்தால் ஆச்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்க வேண்டா என்கிறது.

135. இவள் சன்னிதியாலே காகம் தலை பெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்.

136. புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலை சாய்ந்தால் தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம்.

137. அவையாவன - வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் ஸௌசீல்யமும் ஸௌலப்யமும் ஜ்ஞானமும் சக்தியும்.

138. குற்றம் கண்டு வெருவாமைக்கு வாத்சல்யம்; கார்யம் செய்யும் என்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வம் கண்டு அகலாமைக்கு ஸௌசீல்யம்; கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞான சக்திகள்.

139. இங்கு சொன்ன ஸௌலப்யத்துக்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம்.

140. இது தான் பர வ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படி இருக்கும்.
141. இவை எல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்.
142. திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்தஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முகமும் முறுவலும் ஆஸனபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்.
143. ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டும் திருமேனியில் தோற்றும்.
144. "சரணௌ" - திருவடிகளை.
145. இத்தால் சேர்த்தி அழகையும் உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது.
146. பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது; திண் கழலாய் இருக்கும்.
147. சேஷி பக்கல் சேஷபூதன் இழியும் துறை; ப்ரஜை முலையிலே வாய் வைக்குமா போலே.
148. இத்தால் பிராட்டிக்கு இருப்பிடமாய் குணப்ரகாசகமுமாய் சிசுபாலனையும் அகப்படத் திருத்திச் சேர்த்துக் கொள்ளும் திருமேனியை நினைக்கிறது.
149. "சரணம்" - இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக.
150. இத்தால் ப்ராப்யம் தானே ப்ராபகம் என்கிறது.
151. கீழ்ச் சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே.
152. இவன் செயலறுதியாலே உபாயம் ஆக்குகிறான் இத்தனை.
153. "சரணௌ ஷரணம்" என்கையாலே உபாயாந்தர வ்யாவ்ருத்தமான உபாயம் என்கிறது.
154. "ப்ரபத்யே" - பற்றுகிறேன்.
155. வாசிகமாகவும் காயிகமாகவும் பற்றினாலும் பற்றுக்கு இழவில்லை; ஜ்ஞானாத் மோக்ஷமாகையாலே மாநஸமாகக் கடவது.
156. உபாயம் அவன் ஆகையாலும் இவை நேரே உபாயம் அல்லாமையாலும் இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை.
157. வர்த்தமான நிர்த்தேசம் ஸத்வம் தலை எடுத்து அஞ்சின போது அநுஸந்திக்கைக்காக.
158. உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும் காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விட ஒண்ணாமையாலும் நடக்கும்.
159. பேற்றுக்குப் பலகாலும் வேணும் என்று நினைக்கில் உபாயம் நழுவும்.
160. உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது.
161. ப்ராப்யாந்தரத்துக்கு அன்று என்கை.
162. உபாயாந்தரங்களை விட்டு சரமோபாயத்தைப் பற்றினாப் போலே உபேயாந்தரமான ஐஸ்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது.
163. இவன் அர்த்திக்க வேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவு அறியானோ என்னில்.
164. இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ளம் உகக்கும்.
165. "ஶ்ரீமதே".
166. பெரிய பிராட்டியாரோடே கூடி இருந்துள்ளவனுக்கு.
167. அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாய் இருக்கும்; அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் ப்ராப்யையுமாய் கைங்கர்ய வார்த்திகையுமாய் இருக்கும்.
168. இதிலே திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக அநுஸந்திக்கிறது.

169. இளைய பெருமாளைப் போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை.
170. அடிமை தான் சித்திப்பதும் ரசிப்பதும் அச்சேர்த்தியிலே.
171. "நாராயணாய".
172. ஸர்வ சேஷியாய் உள்ளவனுக்கு.
173. இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்.
174. சேஷித்வத்திலே நோக்கு.
175. ப்ராப்த விஷயத்தில் கைங்கர்யமிறே ரசிப்பது.
176. இந்த சதுர்த்தி கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது.
177. கைங்கர்யம் தான் நித்யம்.
178. நித்யமாக ப்ரார்த்தித்தே பெற வேணும்.
179. சேஷிக்கு அதிசயத்தை விளைக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூப லாபமும் ப்ராப்யமும்.
180. "நம:"
181. கைங்கர்யத்தில் களை அறுக்கிறது.
182. களையாவது தனக்கென்னப் பண்ணுமது.
183. இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்.
184. உனக்கே நாமாட்செய்வோம் என்னும்படியேயாக வேணும்.
185. ஸௌந்தர்யமந்தராயம்; கீழ்ச் சொன்ன கைங்கர்யமும் அப்படியே.
186. கைங்கர்ய ப்ரார்த்தனை போலே இப்பதத்தில் ப்ரார்த்தனையும் என்றுமுண்டு.
187. "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு" என்னா நின்றதிறே.

**த்வய ப்ரகரணம் முற்றிற்று**

---

**ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த**
**முமுக்ஷுப்படி**

## சரம ச்லோக ப்ரகரணம்

188. கீழே சில உபாய விசேஷங்களை உபதேசிக்க, அவை துச்சகங்கள் என்றும் ஸ்வரூப விரோதிகள் என்றும் நினைத்து சோகாவிஷ்டனான அர்ஜுனனைக் குறித்து அவனுடைய சோக நிவ்ருத்தி அர்த்தமாக இனி இதுக்கு அவ்வருகில்லை என்னலாம்படியான சரமோபாயத்தை அருளிச் செய்கையாலே சரம ச்லோகம் என்று இதுக்குப் பேராய் இருக்கிறது.
189. இதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை அருளிச் செய்கிறான். உத்தரார்த்தத்தாலே உபாய க்ருத்யத்தை அருளிச் செய்கிறான்.
190. அதிகாரிக்கு க்ருத்யமாவது உபாய பரிக்ரஹம்.
191. அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்.
192. ராகப்ராப்தமான உபாயம் தானே வைதமானால் கடுகப் பரிக்ரஹிக்கைக்கு உடலாய் இருக்குமிறே.
193. இதில் பூர்வார்த்தம் ஆறு பதம்.
194. "ஸர்வ தர்மாந்".

195. எல்லா தர்மங்களையும்.
196. தர்மமாவது பலசாதனமாய் இருக்குமது.
197. இங்குச் சொல்லுகிற தர்ம சப்தம் த்ருஷ்டபல ஸாதனங்களைச் சொல்லுகை அன்றிக்கே மோக்ஷபல ஸாதனங்களைச் சொல்லுகிறது.
198. அவை தான் ஸ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாய் இருக்கையாலே பஹுவசன ப்ரயோகம் பண்ணுகிறது.
199. அவையாவன - கர்ம ஜ்ஞான பக்தி யோகங்களும் அவதார ரஹஸ்ய ஜ்ஞானம் புருஷோத்தம வித்யை தேச வாஸம் திருநாம சங்கீர்த்தனம் திருவிளக்கெரிக்கை திருமாலை எடுக்கை தொடக்கமான உபாய புத்யா செய்யுமவையும்.
200. ஸர்வ சப்தத்தாலே அவ்வவ ஸாதன விசேஷங்களை அநுஷ்டிக்குமிடத்தில் அவற்றுக்கு யோக்யதா பாதகங்களான நித்ய கர்மங்களைச் சொல்லுகிறது.
201. ஆக ஸ்ருதி ஸ்ம்ருதி சோதிதங்களாய் நித்ய நைமித்திகாதி ரூபங்களான கர்ம யோகாத்யுபாயங்களை என்றபடி.
202. இவற்றை தர்மம் என்கிறது ப்ரமித்த அர்ஜுனன் கருத்தாலே.
203. "பரித்யஜ்ய".
204. த்யாகமாவது உக்தோபாயங்களை அநுஸந்தித்து சுக்திகையிலே ரஜத புத்தி பண்ணுவாரைப் போலேயும் விபரீத திசாகமனம் பண்ணுவாரைப் போலேயும் அநுபாயங்களிலே உபாய புத்தி பண்ணினோம் என்கிற புத்தி விசேஷத்தோடே த்யஜிக்கை.
205. பரி என்கிற உபஸர்கத்தாலே பாதகாதிகளை விடுமா போலே ருசி வாஸனைகளோடும் லஜ்ஜையோடும் கூட மறுவல் இடாதபடி விடவேணும் என்கிறது.
206. ல்யப்பாலே "ஸ்நாத்வா புஞ்சீத" என்னுமா போலே உபாயாந்தரங்களை விட்டே பற்ற வேணும் என்கிறது.
207. "சசால சாபஞ் ச முமோச வீர:" என்கிறபடியே இவை அநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால்கட்டு என்கிறது.
208. சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்கு உறுப்பு.
209. ஸர்வ தர்மங்களையும் விட்டு என்று சொல்லுகையாலே சிலர் அதர்மங்கள் புகுரும் என்றார்கள்.
210. அது கூடாது; அதர்மங்களைச் செய் என்று சொல்லாமையாலே.
211. தன்னடையே சொல்லிற்று ஆகாதோ என்னில்.
212. ஆகாது; தர்ம சப்தம் அதர்ம நிவ்ருத்தியைக் காட்டாமையாலே.
213. காட்டினாலும் அத்தை ஒழிந்தவற்றைச் சொல்லிற்றாம் இத்தனை.
214. தன்னையும் ஈச்வரனையும் பலத்தையும் பார்த்தால் அவை புகுர வழி இல்லை.
215. மாம்.
216. ஸர்வ ரக்ஷகனாய் உனக்குக் கையாளாய் உன்னிசைவு பார்த்து உன் தோஷங்களை போக்யமாகக் கொண்டு உனக்குப் புகலாய், நீர் சுடுமா போலே சேர்ப்பாரே பிரிக்கும் போதும் விடமாட்டாதே ரக்ஷிக்கிற என்னை.
217. இத்தால் பர வ்யூஹங்களையும் தேவதாந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது.
218. தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணப் பிறந்தவன் தானே ஸர்வ தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே என்கிறது.
219. இத்தால் விட்ட ஸாதனங்களில் ஏற்றம் சொல்லுகிறது.
220. அதாவது - ஸித்தமாய் பரமசேதனமாய் ஸர்வ சக்தியாய் நிரபாயமாய் ப்ராப்யமாய் ஸஹாயாந்தர நிரபேக்ஷமாய் இருக்கை.

221. மற்றை உபாயங்கள் ஸாத்யங்கள் ஆகையாலே ஸ்வரூப சித்தியில் சேதனனை அபேக்ஷித்திருக்கும். அசேதனங்களுமாய் அசக்தங்களுமாய் இருக்கையாலே கார்ய ஸித்தியில் ஈச்வரனை அபேக்ஷித்திருக்கும். இந்த உபாயம் அவற்றுக்கு எதிர்த்தட்டாய் இருக்கையாலே இதர நிரபேக்ஷமாய் இருக்கும்.
222. இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஸீல்ய ஸௌலப்யங்களாகிற குண விசேஷங்கள் நேராக ப்ரகாசிக்கிறது.
223. கையும் உழவு கோலும் பிடித்த சிறுவாய்க் கயிறும் சேனாதூளி தூஸரிதமான திருக்குழலும் தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்ய வேஷத்தை மாம் என்று காட்டுகிறான்.
224. "ஏகம்".
225. இந்த ஏக சப்தம் ஸ்தாந ப்ரமாணத்தாலே அவதாரண அர்த்தத்தைக் காட்டுகிறது.
226. "மாமேவ யே ப்ரபத்யந்தே", "தமேவ ஸாத்யம்", "த்வமேவ உபாய பூதோ மே பவ", "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்றும் சொல்லுகிறபடியே.
227. இத்தால் "வ்ரஜ" என்கிற ஸ்வீகாரத்தில் உபாய பாவத்தைத் தவிர்க்கிறது.
228. ஸ்வீகாரம் தானும் அவனாலே வந்தது.
229. ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்.
230. "அதுவும் அவனது இன்னருளே".
231. இத்தை ஒழியவும் தானே கார்யம் செய்யும் என்று நினைக்கக் கடவன்.
232. அல்லாத போது உபாய நைரபேக்ஷ்ம் ஜீவியாது.
233. இது ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிஹாரார்த்தம்; புத்தி ஸமாதாநார்த்தம்; சைதந்ய கார்யம்; ராக ப்ராப்தம்; ஸ்வரூப நிஷ்டம்; அப்ரதிஷேதத்யோதகம்.
234. கீழ் தானும் பிறருமான நிலையைக் குலைத்தான். இங்குத் தானும் இவனுமான நிலையைக் குலைக்கிறான்.
235. அவனை இவன் பற்றும் பற்று அஹங்கார கர்பம்; அவத்யகரம்.
236. அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்.
237. மற்றை உபாயங்களுக்கு நிவ்ருத்தி தோஷம்; இதுக்கு ப்ரவ்ருத்தி தோஷம்.
238. "சிற்ற வேண்டா".
239. நிவ்ருத்தி கீழே சொல்லிற்று.
240. உபகார ஸ்ம்ருதியும் சைதந்யாத்தாலே வந்தது; உபாயத்தில் அந்தர்பவியாது.
241. "ஷரணம்".
242. உபாயமாக.
243. இந்த ஷரண சப்தம் ரக்ஷிதாவையும் க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக் கடவதே ஆகிலும் இவ்விடத்தில் உபாயத்தையே காட்டுகிறது; கீழோடே சேர வேண்டுகையாலே.
244. "வ்ரஜ".
245. புத்தி பண்ணு.
246. கத்யர்த்தமாவது புத்யர்த்தமாய் அத்யவஸி என்றபடி.
247. வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களாய் இருக்கச் செய்தேயும் "ஞாநாந் மோக்ஷம்" ஆகையாலே மாநஸமான அநுஷ்டானத்தைச் சொல்லுகிறது.
248. ஆக, த்யாஜ்யத்தைச் சொல்லி, த்யாகப் ப்ரகாரத்தைச் சொல்லி, பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, உபாய நைரபேக்ஷ்யம் சொல்லி, உபாயத்வம் சொல்லி, உபாய ஸ்வீகாரம் சொல்லுகிறது.
249. "அஹம்".

250. ஸ்வக்ருத்யத்தை அருளிச் செய்கிறான்.
251. ஸ்ர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ப்ராப்தனான நான்.
252. இவன் கீழ் நின்ற நிலையும் மேல்போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தமான குண விசேஷங்களையும், தன் பேறாகச் செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான பந்த விசேஷத்தையும் காட்டுகிறது.
253. தனக்காகக் கொண்ட ஸாரத்ய வேஷத்தை அவனை இட்டுப் பாராதே தன்னை இட்டுப் பார்த்து அஞ்சின அச்சம் தீர, தானான தன்மையை அஹம் என்று காட்டுகிறான்.
254. கீழில் பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லை நிலமிறே.
255. "த்வா".
256. அஜ்ஞனாய் அசக்தனாய் அப்ராப்தனாய் என்னையே உபாயமாகப் பற்றி இருக்கிற உன்னை.
257. "ஸர்வ பாபேப்ய":
258. மத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் என்று யாவை சில பாபங்களைக் குறித்து அஞ்சுகிறாய், அவ்வோ பாபங்கள் எல்லாவற்றில் நின்றும்.
259. "பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்" என்கிறபடியே அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களைச் சொல்லுகிறது.
260. த்ருணச்சேத சுண்டீயநாதிகளைப் போலே ப்ரக்ருதி வாஸனையாலே அநுவர்த்திக்கும் அவை என்ன, லோகாபவாத பீதியாலும் கருணையாலும் கலக்கத்தாலும் செய்யும் அவை என்ன, இவை எல்லாவற்றையும் நினைக்கிறது.
261. உந்மத்த ப்ரவ்ருத்திக்கு க்ராம ப்ராப்தி போலே த்யஜித்த உபாயங்களிலே இவை அத்விதங்களாமோ என்று நினைக்க வேண்டா.
262. கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடு ஒக்கும்.
263. "மோக்ஷ இஷ்யாமி".
264. முக்தனாம்படி பண்ணக் கடவேன்.
265. ணிச்சாலே - நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தன்னடையே விட்டுப் போங்காண் என்கிறான்.
266. என்னுடைய நிக்ரஹ பலமாய் வந்தவை நான் இரங்கினால் கிடக்குமோ என்கை.
267. அநாதி காலம் பாபங்களைக் கண்டு நீ பட்ட பாட்டை அவை தாம் படும்படி பண்ணுகிறேன்.
268. இனி உன் கையிலும் உன்னைக் காட்டித் தாரேன்; என் உடம்பில் அழுக்கை நானே போக்கிக் கொள்ளேனோ.
269. "மா சு ச:".
270. நீ உன் கார்யத்திலே அதிகரியாமையாலும், நான் உன் கார்யத்திலே அதிகரித்துக் கொண்டு போருகையாலும், உனக்கு சோக நிமித்தம் இல்லை காண் என்று அவனுடைய சோக நிவ்ருத்தியைப் பண்ணிக் கொடுக்கிறான்.
271. நிவர்த்தக ஸ்வரூபத்தைச் சொல்லி நிவர்த்யங்கள் உன்னை வந்து மேலிடாது என்று சொல்லி உனக்கு சோக நிமித்தம் இல்லை காண் என்கிறான்.
272. "எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே" என்கிறான்.
273. பாபங்களை நான் பொறுத்துப் புண்யம் என்று நினைப்பிடா நிற்க, நீ சோகிக்கக் கடவையோ?
274. உய்யக்கொண்டார் விஷயமாக உடையவர் அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

275. இதுக்கு ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு.
276. இது தான் அநுவாத கோடியிலே என்று வங்கிபுரத்து நம்பி வார்த்தை.
277. அர்ஜுனன் க்ருஷ்ணனுடைய ஆனைத்தொழில்களாலும், ரிஷிகளின் வாக்யங்களாலும், க்ருஷ்ணன் தன் கார்யத்திலே அதிகரித்துக் கொண்டு போருகையாலும், இவனே நமக்குத் தஞ்சம் என்று துணிந்த பின்பு தன்னைப் பற்றச் சொல்லுகையாலே.
278. புறம்பு பிறந்ததெல்லாம் இவன் நெஞ்சை சோதிக்கைக்காக.
279. வேத புருஷன் உபாயாந்தரங்களை விதித்தது கொண்டிப் பசுவுக்குத் தடி கட்டி விடுவாரைப் போலே அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூப ஞானம் பிறக்கைக்காக.
280. ஸந்யாசி முன்புள்ளவற்றை விடுமா போலே இவ்வளவு பிறந்தவன் இவற்றை விட்டால் குற்றம் வாராது.
281. இவன் தான் இவை தன்னை நேராக விட்டிலன்.
282. கர்மம் கைங்கர்யத்திலே புகும்; ஞானம் ஸ்வரூப ப்ரகாசத்திலே புகும்; பக்தி ப்ராப்ய ருசியிலே புகும்; ப்ரபத்தி ஸ்வரூப யாதாத்ம்ய ஞானத்திலே புகும்.
283. ஒரு பலத்துக்கு அரிய வழியையும் எளிய வழியையும் உபதேசிக்கையாலே இவை இரண்டும் ஒழிய பகவத் ப்ரஸாதமே உபாயமாகக் கடவது.
284. பேற்றுக்கு வேண்டுவது விலக்காமையும் இரப்பும்.
285. சக்ரவர்த்தித் திருமகன் பாபத்தோடே வரிலும் அமையும் என்றான்; இவன் புண்யத்தைப் பொகட்டு வர வேணும் என்றான்.
286. ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசி விஸ்வாசங்களை உடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நசித்தல் ஒழிய நடுவில் நிலை இல்லை என்று பட்டருக்கு எம்பார் அருளிச் செய்த வார்த்தை.
287. வ்யவஸாயம் இல்லாதவனுக்கு இதில் அந்வயம் ஆமத்தில் போஜனம் போலே.
288. "விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்கிறபடியே அதிகாரிகள் நியதர்.
289. "வார்த்தை அறிபவர்" என்கிற பாட்டும், "அத்தனாகி" என்கிற பாட்டும் இதுக்கு அர்த்தமாக அநுஸந்தேயம்.

**சரம ஷ்லோக ப்ரகரணம் முற்றிற்று**

**பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஷரணம்**